12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் அருளியது

# தாய்மொழிப் பற்றுள்ளவனே அந்தணன்

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,120 ஆனி மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“தாய்மொழிப் பற்றுள்ளவனே அந்தணன்”** - 3/4/1985இல் அருள்மிகு பரமாச்சாரியார் திரு நெ.சேவுகன் அவர்கள் குருவாணை பெற்று திருவருட்செல்வர் திரு ABT மகாலிங்கம் அவர்களின் மடலுக்கு எழுதிய பதில் மடல்.

2. **“கலியுக ஆன்மீக ஆசானுக்கு தரப்படும் அறிவுரை”** - 10/5/1985இல் அருள்மிகு பரமாச்சாரியார் திரு நெ.சேவுகன் அவர்கள் துறையூரில் உள்ள அகத்தியர் சன்மார்க்க சங்கத்தினருக்கு விடுத்த விளக்க மடல்.

3. **“அருளுலகச் சர்வாதிகாரம் அமைத்தே தீருவோம்”** - 13/6/1985இல் பிறமாச்சாரியார் திரு சி.கவிக்குமார் அவர்கள் திருச்சிராப்பள்ளி வேல்முருகன் ஆசிரமத்தைச் சேர்ந்த திரு P.சீனிவாசன் அவர்களுக்கு வரைந்த பதில் மடல்.

4. **“அருளாட்சிப் பணி இருளகற்றும் கண்டிப்புக் குருவாணைத் திருவோலை”** - 12/2/1985இல் குருதேவர் அவர்கள் மதுரையைச் சேர்ந்த அடியான்கள் அனைவருக்கும் எழுதிய அஞ்சல்.

5. **“அருளாட்சி அமைப்பு அழைப்பு அறிவிப்பு”** - 1986இல் காரைக்குடிச் சுற்றுப்பயணத்திற்காக தயாரிக்கப்பட்ட அறிவிக்கையின் நகல்.

# தாய்மொழிப் பற்றுள்ளவனே அந்தணன்

1) பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய அருள்மிகு திருவருட்செல்வர் கொடைவள்ளல் பெரியவர் ABT மகாலிங்கம் ஐயா அவர்கள் சமூகத்திற்கு;

அடியவன், பதினெண்சித்தர் சிவசத்திப் பீடம், அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலாளர், அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் சித்தரடியான் நெ.சேவுகன் (காதி வசுத்திராலயம், கொட்டாம்பட்டி 625103) குருகுலத்திலிருந்து தங்களின் பதிலை அனைவருடனும் படித்து மகிழ்ந்து எங்கள் தலைவர் குருதேவர் அவர்களுக்கும், மற்ற அனைவருக்கும் தெரிவித்து மகிழ்ந்தோம்.

2) எங்களுடைய கருத்துக்களை தங்களுடைய சிந்தனைக்கு அனுப்புகிறோம். தவறுகள் இருப்பின் மன்னிக்கவும். திருத்தமும் வருத்தமும் தங்களைப் பொறுத்ததே. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.

3) இந்து மறுமலர்ச்சிக்காக தாங்கள் அரசியலில் ஈடுபடாமல் முழுக்க முழுக்க கல்வி, கலை, இலக்கியம், தொழில், மதம், விளையாட்டு, ... என்று தனித்துச் செயல்படும் மிகப்பெரிய நிலையினை நாங்கள் உணருகிறோம், மதிக்கிறோம், போற்றுகிறோம். நீங்கள் அரசியல்வாதி இல்லை என்பதனால்தான் இந்த பதில் அனுப்புகிறோம். மதுரை, மேலூர், காரியேந்தல்பட்டி (கொட்டாம்பட்டி) குருகுலம் அமைத்து அனைத்து வகையான விண்ணுலக, மண்ணுலக வழிபடுநிலையினர்களான கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள், உலக அருளாளர்கள், பிறப்பெடுக்காத

உருவங்கள், அருவங்கள், அருவுருவங்கள், ... முதலிய அனைவருக்கும் வெட்டவெளிக் கருவறைகள் அமைத்து 'ஐந்தீ வேட்டல்' முறையிலும், 'முத்தீ ஓம்பல்' முறையிலும் அனைத்து வகையான பூசைகளையும் செய்து அருளுலக இருளகற்றும் பணியினை நிறைவேற்றி வருகிறோம் நாங்கள். தாங்களோ, தங்களைச் சார்ந்தவர்களோ அந்த வழியாகச் செல்லும் போது முன்கூட்டியே அறிவித்து விட்டு வந்து சந்தித்துச் செல்லுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும், முழுநிலவு நாட்களிலும் பொதுமக்களுக்கு அருள் வழங்குகிறோம். தனிமனிதர்களையும், அனைத்துவகையான வழிபாட்டு நிலையங்களையும் புத்துயிர்ப்புச் செய்து தருகிறோம். தங்கள் விருப்பம் போல் மேலும் தெரியலாம், புரியலாம், உணரலாம்.

4) ஐயா, இம்மண்ணுலகம் தோன்றுவதற்கு முன்பே அண்டபேரண்டங்களில் வாழ்ந்து வரும் பதினெண்சித்தர்களின் சாதனைகளும், போதனைகளுமே இந்துமதம் எனும் சித்தர்நெறி. இன்றைய அமுதத் தமிழ்மொழி அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களின் அருளாட்சி மொழியேயாகும். இந்த மொழியும், இந்துமதமும்தான் இம்மண்ணுலகில் உள்ள மதங்களுக்கும், மொழிகளுக்கும் தாய்; புரியலாம், தெரியலாம், உணரலாம்.

5) பதினெண்சித்தர்கள் எழுத்து மூலமாக வாக்கியங்கள், வாசகங்கள், பாரம்பரியங்கள், ... ... என்று நாற்பத்தெட்டு வகையான இலக்கியங்களை எழுதி வருகிறார்கள். பதினெண்சித்தர்களின் தத்துவ இலக்கியங்களுக்கு 43,73,085 ஆண்டுகள் வயதாகின்றன. தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இது பற்றி அறிந்தால்தான் தன்னை அறிதல், முன்னை அறிதல், பின்னை அறிதல், தலைவனை அறிதல், ... என்ற நிலைகளை மற்ற மொழி வழி இனத்தாரை விட மிக விரைவில் அறியலாம். தமிழர்களிலேதான் பதினெண்சித்தர்களின் விந்துவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் அதிகமாக வாழையடி

வாழையாக இருந்து வருகின்றார்கள். எனவேதான் 48 வகை வழிபடு நிலையினரும், 48 வகை வழிபடு நிலையங்களும், 48 வகை அருட்பட்டத்தார்களும், 48 வகை அருளாளர்களும், 48 வகைச் சித்தர்களும், 13 வகைச் சித்தியாளர்களும், ... தமிழினத்தில் மட்டும்தான் வாழையடி வாழையாகத் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்பேருண்மையினை ஏட்டறிவாலும், பட்டறிவாலும் புரிந்து கொள்ளலாம்.

6) பெரியீர்! இம்மண்ணுலகில் உள்ள அனைத்து இனங்களிலும், தமிழினம் ஒன்றில்தான் அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய ஆற்றலுடையவர்கள் என்றென்றைக்கும் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். இது தமிழ்மொழி என்னும் அமுதத்தினால் விளைகின்ற அருட்பயிரே ஆகும். இந்த அருட்பயிர் விளைச்சலைத் தடுக்கவும், கெடுக்கவும்தான் சமசுக்கிருதம் என்ற கானல்நீர் (பொய்மைத் தோற்றம் நீர்) பயன்படுகிறது. எனவே, 'சமசுக்கிருதத்தை முழுமையாக அழிப்பதுதான் அருளுலகத்தைக் காப்பாற்றுவதாகும்; அருட்பயிரைப் பசுமையாக விளைவிப்பதாகும்' என்று மிகக் கடுமையாகக் கொச்சையாக குருபாரம்பரியம் கூறுகிறது.

இவைகள் அனைத்துக்கும் உரிய தனித்தனிப் பெயர்கள் அழகான இனிய எழில்மிகு தமிழ்ச் சொற்களாக இருந்தும் இவை மக்களால் தெரிய முடியாமல் போனது சமசுக்கிருத மொழியால்தான். பல நூறாயிரக்கணக்கான (பல இலட்சம்) தமிழ்ச்சொற்களும், அவற்றிற்குரிய பொருட்களும், அவற்றின் வாழ்வியல் பயன்களும் சமசுக்கிருத மொழியால்தான் கெடுக்கப்பட்டன, கொலை செய்யப்பட்டன. இதனால்தான், சமசுக்கிருத மொழியைச் சித்தர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள், மறுக்கிறார்கள், வெறுக்கிறார்கள், கடுமையாக அழித்தொழிக்க விரும்புகிறார்கள். அந்நியர்களான (பிற + மண்ணினர் =>) பிராமணர் தமிழ்மொழியையும், இனத்தையும் வீழ்த்த, தாழ்த்த,

ஆழ்த்த, நலிவடையச் செய்ய சமசுக்கிருத மொழியையும், அதன் இலக்கியங்களையும் ஆயுதமாக பயன்படுத்துகிறார்கள் என்பதால்; சமசுக்கிருத மொழியையும், அதன் இலக்கியத்தையும், பிருமணரையும் வேள்வியில் அவிர்ப்பலியாக அழிப்பதே சித்தர் நெறியினரின் கடமை என்று பத்தாவது (கி.மு.100 - கி.பி.150), பதினோராவது (கி.பி.785 - கி.பி.1040) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்கள் குருபாரம்பரியங்களில் கூறுகிறார்கள். இது தொடர்பான குருவாசகங்கள், குருவாக்கியங்கள், குருவாக்குகள் இருக்கின்றன என்பதைத் தங்களைப் போன்றோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

**<u>குறிப்பு</u>**:- "சமசுக்கிருத மொழியில் மந்திரம் சொல்கிற எவனாவது பத்தி, சத்தி, சித்தி, முத்தி (சித்து விளையாடல் பற்றிக் கவலையில்லை) என்ற நான்கு நிலைகளில் உருப்படியாகச் செயல்பட்டிருக்கிறானா? இன்றைக்கு வரை சமசுக்கிருத மொழியோடு அருளுலகில் வாழ்வது மண்ணால் செய்த பாவையை மணந்து இல்லற வாழ்க்கை நடத்த நினைப்பதைப் போன்றது" என்று கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம், தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம், திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம், அருள்வாக்கு, அருள்வாக்கியம், அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாக்கியம், மருள்வாசகம் ... முதலியவைகளும் கடுமையாகக் கருத்துக் கூறுகின்றன என்கின்ற போதுதான் குருவாக்குகளையும், குருவாக்கியங்களையும், குருவாசகங்களையும், குருபாரம்பரிய வாசகங்களையும் வெறியுடையவை என்றோ! கடுமையானவை, கொடுமையானவை என்றோ! எங்களால் நினைக்க முடியவில்லை.

இன்னும் சொல்லப் போனால், இன்றைய உலகில் கண்கூடாகப் பெரும்பாலான வழிபாட்டு நிலையங்கள் அருள் ஊற்றுக்கள் அடைக்கப்பட்டு, வறண்டே அனைத்து வகையான தனிமனிதப் பூசைகளும், வழிபாடுகளும், விழாக்களும் அருட்பயனைத் தர

முடியாமல் இருண்டே கிடக்கின்றன. இன்னும் சொல்லப் போனுல், பிணமாகவே உள்ளன. இவற்றிற்கெல்லாம் காரணமாக இருக்கின்ற பிருமணர்களின் தாசராகவே தாங்கள் இருக்கின்றீர்கள். இது போல்தான் காலங்கள் தோறும் தலைவர்கள், பெரிய மனிதர்கள் ... பிருமண தாசர்களாக வாழ்ந்து அருளுலகையே இருளச் செய்துவிட்டனர், வறட்சி பெறச் செய்துவிட்டனர், வறுமை பெறச் செய்துவிட்டனர். இவற்ருல் எங்களைப் போன்ருேர் பொறுமையிழந்து வெறுப்பும் வெறியும் கொண்டு குருதிப் புரட்சிக்கே ஆத்தாள் அண்டமாளும் தேவி அருளாட்சித் தலைவி வீரமாகாளி, வெல்போர்க் கொற்றவை, இராகுகாலக் கொற்றவை, கபாலீசுவரி ... முதலியவர்களுக்கு குருதி முழுக்காட்டவும்; குருதி அவிர்ப்பலி வழங்கவும்; குருதிப் படையலைப் படைக்கவும் தயாராக நேரிட்டு விட்டது!

இமயத்தின் முகடு முதல் கன்னியாகுமரி முனை வரை சமசுக்கிருத மறுப்பும், பிருமண வெறுப்பும்; நிர்வாணத் துறவிகளின் சத்தியாக, கபாலிகர்களின் சத்தியாக, சத்தி வழிபாட்டினரின் சத்தியாக வளர்ந்து விட்டது! வளர்ந்து விட்டது! வளர்ந்து விட்டது! எனவே, அன்பு கூர்ந்து தங்களைப் போன்ருேர் பிருமண தாச நிலைகளை (பிருமண அடிமை நிலைகளை), சமசுக்கிருத பத்தி நிலைகளை மாற்றிக் கொள்வது நல்லது! நல்லது! நல்லது! இது தங்களின்பால் உள்ள மதிப்பாலும், அன்பாலும் விடுக்கப்படும் வேண்டுகோள்.

7) ஐயா, தாங்கள் பல மொழிகளைக் கற்றுக் கொண்டால் நல்லது என்று கூறியிருக்கிறீர்கள். இதனை பத்தாவது, பதினேராவது பதினெண்சித்தர்களின் குருபாரம்பரிய வாசகம் கடுமையாக மறுக்கிறது, வெறுக்கிறது. “தாய்மொழியைத் தவிர தொழில் மொழியாக ஒரே ஒரு மொழியைக் கற்ருலும் கூட அவனுடைய சிந்தையும், நெஞ்சமும் கூலி உணர்வும், போலி உணர்வும், அடிமை உணர்வும், காசுக்காக எதையும் விற்கும் வியாபார உணர்வும், துரோக உணர்வும்,

விரோத உணர்வும் ... மிகுந்த ஒன்றுகவே மாறிவிடும். காசுக்காக உடலை விற்கும் பொருட்பெண்டிரை விட; அப் பொருட்பெண்டிரை வைத்து வயிறு வளர்க்கும் (மாமா வேலை பார்ப்பவன்) ஈனப் பிறவிகளை விட கேடு கெட்டவனே இரு மொழிகளுக்கு மேல் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்பவன்....” (இதற்கு மேல் பச்சையான, கொச்சையான வாசகங்கள் இருப்பதால் எழுதவில்லை.)

இதைத் தாங்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும் சரி; இதை அறிவுலகம் எப்படி ஏற்றுக்கொண்டாலும் சரி; நாங்கள் பதினெண்சித்தர்களின் கருத்துப்படி **“தாய்மொழிப் பற்றுள்ளவனே மனிதன்; இவனே தன்னலம் இன்றி என்றென்றும் பொதுநலம் பேணும் மேலோனுக உயர்பவன். இவனே அந்தணன். இவனே நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டுநிலைய ஊழியக்காரனுகச் சிறக்க முடியும்...”** என்ற குருபாரம்பரிய முறைப்படிதான் வாழுகிறோம்.

8) பதினெண்சித்தர்களின் இந்துமதம் எனப்படும் சித்தர்நெறி இன விடுதலைகள், மொழி விடுதலைகள், இன உரிமைகள், இனச் சமத்துவங்கள், மொழிச் சமத்துவங்கள் ... என்ற சொற்களைத்தான் அதிகமாகக் கையாண்டிருக்கிறது என்பதால்; நாங்கள் உலகில் உள்ள அனைத்து மொழிகளுமே, அனைத்து இனங்களுமே தனித்தன்மையோடு அவரவர்க்குரிய உரிமையோடும், பெருமையோடும் வாழுவதைத்தான் விரும்புகின்றோமே தவிர மொழி ஆதிக்கத்தையோ, இன ஆதிக்கத்தையோ, மொழிச் சுரண்டலையோ, இனச் சுரண்டலையோ ஏற்க இயலாது, ஒப்புக்கொள்ள இயலாது, அநுமதிக்கக் கூடாது.

எனவே, இந்திய மண்ணிலும் பிற உலகம் முழுவதிலும் மொழி விடுதலைக்காக, இன விடுதலைக்காக பதினெண்சித்தர்களின் தத்துவப்படியும், சித்தாந்தப்படியும் அருட்போர் நிகழ்த்தவே நேரிடும்! நேரிடும்! நேரிடும்! அருட்படையின் தலைவனுக, திருத்தணி முருகன் மயில் மேல் தேவியர் இருவருடனும் அமர்ந்து அருட்படைக்குத்

தலைமை பூண்டு மூன்றுண்டுகள் ஆகின்றன (5-1-1982 முதல்). எனவே, அருட்போர் அருளாட்சித் தலைவி வீரமாகாளியின் ஆணையால் நடந்தே தீரும். தேவசேனுபதியின் தலைமையில் அருட்படை இயங்கியே தீரும்.

இராமாயணப் போரில் அருட்பிறப்பெடுத்தவன் தன் மனைவியின் நிலைக்காக போரிட்டான். பாரத காலத்தில் அருட்பிறப்பெடுத்தவன் தன் சுற்றத்தாரின் நீதிக்காகப் போரிட்டான். கலியுகத்தில் அருட்பிறப்பெடுத்திருக்கும் எங்களின் தலைவர், குருதேவர், ஞானத்தந்தை, ஞானுச்சாரியார், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறூர் முறையான பயிற்சியாலும், முயற்சியாலும், தேர்ச்சியாலுமே 48வகை அருட்பட்டங்களுக்கு மேலான அருட்பட்டங்களையும் எய்தி நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து அருளாட்சி புரிய ஆரம்பித்து விட்டார். இனி அருளுலக இருள்கள் அனைத்தும் அகன்றே தீரும், அகன்றே தீரும், அகன்றே தீரும்.

இந்த அருட்கொடை வள்ளல் அனைத்தையும் அமைதி வழி, அற வழி, அருள் வழி, சமாதான வழியில் செய்ய வேண்டும் என்று விரும்புவதால்தான் ஏற்கனவே (அனுதி காலத்திலேயே) நிர்ணயிக்கப்பட்டுவிட்ட அருட்போர் நிகழுவது தள்ளிப் போய்க் கொண்டு இருக்கிறது. ஆனுல், நாட்டு நடப்பில் பிருமண வெறியும், சமசுக்கிருத வெறியும், பிருமண அடிமைகளின் ஆதிக்கமும், பிருமண இயக்கங்களின் போக்கும், நோக்கும் செர்மனியில் யூத மொழிக்கும், யூத இனத்துக்கும் ஏற்பட்டது போன்ற பேரழிவை உருவாக்கி விடுமே என்ற எண்ண ஓட்டத்தைத்தான் எங்களுக்கெல்லாம் வழங்கி யிருக்கிறது. நாங்கள் எல்லாம் கையில் திரிசூலமேந்தி சுடுகாடு, புதைகாடு, இடுகாடு ... என்கிற 18 வகைக் காடுகளிலும் உள்ள காடுகிழாள்களையும், காடுகிழான்களையும், ஆண்டிச்சிகளையும்,

ஆண்டிகளேயும், ஈசுவரர்களேயும், ஈசுவரிகளேயும் ... முறையாகவும் நிறையாகவும் வழிபடுகிறோம், வழிபடுகிறோம், வழிபடுகிறோம்.

சமசுக்கிருதப் பொய்களிலும், கற்பனேகளிலும், கனவுகளிலும் இருந்து பதினெண்சித்தர்களின் உண்மையான இந்துமதம் விடுவிக்கப்பட்டே தீரும். விரைவில் பிருமண மாயைகளே, சூழ்ச்சிகளே, சுரண்டல்களே, ஏமாற்றுக்களே, திரிபுவாதங்களே, ... முழுமையாக எதிர்த்து முறியடிக்கும் அருட்பணி துவங்கும்! துவங்கும்! துவங்கும்! இன்றைய தமிழகத்தில் அருட்செல்வர் என்ற பெயரில் வாழும் தங்களுக்கு இவ்வறிவிப்பினே வழங்கக் கடமைப் பட்டிருக்கிறோம். தாங்கள் புரிந்தால் புரிந்து, உணர்ந்தால் உணர்ந்து செயல்படலாம்.

9) ஐயா, தங்களால் வடலூர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளாரும், அவரால் தாங்களும் விளம்பரம் பெற்று வருகிறீர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், வடலூர் இராமலிங்க அடிகளாரை மிகமிக அநாகரிகமாக, காட்டுமிராண்டித் தனமாக விமரிசித்து பி.சி. கணேசன் எழுதியுள்ளான். (காதல் மோகினி, சனவரி 1985). அப்போது தங்களின் உடலோ, சிந்தையோ, உள்ளமோ, உணர்வோ, எண்ணமோ தானாகவே துடிதுடித்துப் பதறிக் கதறி வெறி கொண்டு மறுப்புக் குரல், வெறுப்புக் குரல், போர்க் குரல் கொடுக்காமல் போனது ஏன்? எப்படி? எதற்காக?

ஐயா! பிருமணத் தலைவர்களேயோ, பிருமண சமூகத்தையோ, பிருமணக் கருத்துக்களேயோ, பிருமண வேதத்தையோ, பிருமண மொழியையோ யாரேனும் ஊசிமுனேயளவாவது புண்படுத்துகிற வண்ணம் எழுதியிருந்தால் தாங்கள் எப்படியெல்லாம் கொதித்திருப்பீர்கள், தாங்களும் தங்களேச் சார்ந்தவர்களும், எப்படி எப்படிப்பட்ட அறிக்கைகளேயும், ஆர்ப்பாட்டங்களேயும் நடத்தியிருப்பீர்கள் என்பதை கற்பனே செய்து பாருங்கள். நீங்கள் இராமலிங்க அடிகளார் மீது உண்மையான பத்தி செலுத்தா

விட்டால் போகிறது. மதிப்புக் கூடவா இல்லை. இராமலிங்க அடிகளாரை காட்டிக் கொடுத்ததைப் போல அவர் இழிவு படுத்தப்பட்டதற்குக் கொதித்தெழாத தங்களுக்காக வெட்கப்படுகிறோம்! வேதனைப்படுகிறோம்! வருந்தற்க!

“தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும், உரிமைக்கும், பெருமைக்கும் கேடு செய்பவர்கள், துரோகம் செய்பவர்கள், விரோதம் செய்பவர்கள், சிதைவும் சீரழிவும் வழங்குபவர்கள் பெரும்பாலும் தமிழர்களே ஆவார்கள். இதனை உணர்ந்து தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும், இனப் பற்றும், இன ஒற்றுமையுணர்வும், தமிழ்ப் பண்பாட்டுப் பிடிப்பும் உருவாகுமாறு செய்த பிறகுதான்; தமிழர்களை மூலவர்களாகவும், காவலர்களாகவும் உடைய இந்துமத மறுமலர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். தமிழின விழிச்சியே இந்துமத மறுமலர்ச்சி! தமிழின எழுச்சியே இந்துமத மறுமலர்ச்சி! தமிழின செழுச்சியே இந்துமத மறுமலர்ச்சி! தமிழனின் தன்மானப் பிடிப்பே இந்துமதத்தின் உயிர்த்துடிப்பு! ...” என்று குருபாரம்பரிய வாசகம் குறிக்கிறது. விரிவஞ்சி முடிக்கிறோம்.

எனவேதான், சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் ‘தமிழ்மொழியின் விடுதலையே தமிழின விடுதலை!’, ‘தமிழின விடுதலையே இந்துமத விடுதலை!’, ‘தமிழ்மொழியின் ஆட்சி மீட்சியே தமிழின ஆட்சி மீட்சி!’, ‘தமிழின ஆட்சி மீட்சியே இந்துமத ஆட்சி மீட்சி!’, ‘தமிழர்களின் வாழ்வு உரிமையும், பெருமையும், செழுச்சியும் பெற்றால்தான் இந்துமத மறுமலர்ச்சியில் உரிமையும், பெருமையும், செழுச்சியும், பயனும் இருக்கும்!’ என்று நம்புகிறோம், ஒப்புக்கொண்டு இதற்காகச் செயல்படுகிறோம்.

எனவேதான், வடலூர் அருட்பெருஞ்சோதி இராமலிங்க அடிகளார் ஒரு நாலாந்தர எழுத்தாளனால் கீழ்த்தரமாகத் தாழ்த்தி விமரிசிக்கப்பட்ட பொழுது நாங்கள் கொதித்தெழுந்தோம். உடனே பத்தாயிரம்

அறிக்கைகள் அச்சிட்டோம். நான்கு பேர்கள் எங்கள் குருவின் உத்தரவோடு, வாழ்த்துதலோடு தைப்பூச விழாவில் தொடர்ந்து மூன்று நாட்கள் நேரில் வந்து தங்கி தனிமனிதர்களுக்கும், அருட்பா சபையினருக்கும், மன்றத்தார்க்கும், அருட்பா பெரியோர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், ஆர்வமுடையோர்களுக்கும், அருட்பா வளர்ப்பாளர்களுக்கும், காப்பாளர்களுக்கும் ... அறிக்கைகளை வழங்கிப் படித்துப் பாருங்கள், சிந்தியுங்கள் ... என்று கெஞ்சி மன்றாடி வேண்டுகோள் விடுத்தோம்.

இம்மட்டின்றி, தமிழக அரசு அதிகாரிகள், தமிழ்ச் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் தொழில் தலைவர்கள், தமிழில் வெளிவருகின்ற அனைத்து நாளேடுகள், வார மாத இதழ்கள், பதிப்பகங்கள் ... முதலியவற்றிற்கும் அறிக்கைகளை 10 பைசா அஞ்சல் தலையொட்டி அனுப்பி வைத்தோம். ஆனால், இன்று 31-3-1985ஆம் தேதி முடிய ஒரு அஞ்சலட்டை கூட நன்றி தெரிவித்து எழுதவே இல்லை. தங்களைப் போன்றோரிடம் இருந்து கூட வராதது குறிப்பிடத் தக்கது. வெட்கம்! வேதனை! எனவே, இராமலிங்க அடிகளாரின் பேரில் உள்ள சபைகள், மன்றங்கள், இயக்கங்கள், வாரவழிபாட்டு குழுக்கள், பத்தர்கள், தலைவர்கள், ... முதலிய அனைத்தும் போலியா? அல்லது செத்துப் போய் விட்டனவா? விரும்பினால் அன்புகூர்ந்து இதுபற்றி எழுதுங்கள்.

10) ஐயா! தங்களை மிகவும் மதிக்கிறோம்! போற்றுகிறோம்! தாங்கள் இந்து மறுமலர்ச்சி இயக்கத்துக்கு உட்பட்ட 10 வகையான அமைப்புக்களில் ஒன்றான அருட்பணி விரிவாக்கத் திட்ட அமைப்பின் பதினெட்டு உறுப்பினர்களுக்கு மூன்று பக்க நெடிய அஞ்சலொன்றினை அழகிய தட்டெழுத்தில் பொறித்து எளிய, இனிய தமிழ்நடையில், தெளிவான விளக்க அஞ்சல் அனுப்பியமைக்கு நன்றி, மிக்க நன்றி!

11) ஐயா! இந்த அஞ்சல் தங்களுக்குப் பிருமணர்களிடமும், சமசுக்கிருத மொழியிடமும் இருக்கின்ற பத்தியின் அடிப்படையாகவும், நன்றியின் அடிப்படையாகவும்தான் வந்தது! வந்தது! வந்தது! என்பதில் நீங்களோ, வேறு யாருமோ மறுக்கவே முடியாது! ஏனெனில், இராமலிங்க அடிகளாரை இழித்துரைத்ததற்கு மறுத்து வெளியிட்ட எங்கள் அறிக்கையில் எங்களின் தலைமைப் பணியாளர், தலைமைப் பொறுப்பாளர், தலைமைச் செயலாளர் மூவரின் முகவரியும் அச்சிடப் பட்டுள்ளது. அதைக்கண்ட தாங்கள் இப்போது எழுதியிருப்பது போல் மூன்று பக்க அஞ்சல் எழுதக் கூடத் தேவையில்லை. மூன்றே வரிகள் அல்லது 'நன்றி' என்ற ஒரே சொல் எழுதிக் கையொப்பமிட்டாவது மூன்று இடங்களுக்கும் ஒரு அஞ்சலட்டை அனுப்பியிருப்பீர்களேயானால் நீங்கள் அருட்பெருஞ் செல்வர்தான், மொழி வெறியற்றவர்தான்; இன வெறியற்றவர்தான்; சமசுக்கிருத வெறியற்றவர்தான்; பிருமண அடிமைநிலை பெறுதவர்தான்; ஆரிய வேதமதப் பித்தராக இல்லாதவர்தான்; உண்மையிலேயே இராமலிங்க அடிகளாரையும், அவர் பாடிய அருட்பாவையும், பேசிய தமிழையும், பிறந்த தமிழினத்தையும், மண்ணையும் மதிப்பவர், போற்றுபவர்தான் என்பதை ஒப்புக் கொள்வோம் நாங்கள். ஆனால், தங்களின் அறிவுரையும், செயலும் உலகின் இருமுனைகளாக, இருவேறு திசைகளாக இருக்கின்றன என்பதை உணர்ந்து வருந்துகிறோம்! வெட்குகிறோம்! வேதனைப் படுகிறோம்! இது எங்களுடைய உண்மையான உணர்வு! எனவேதான், பணிவோடும், துணிவோடும் கருத்து தருகிறோம்.

அன்புகூர்ந்து தங்களைப் புண்படுத்துகிற நோக்கோ போக்கோ ஊசிமுனையளவு கூட எங்களுக்கு இல்லை! இல்லை! இல்லை! ஏனெனில், இம்மண்ணுலகில் உள்ள தமிழர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவினர்களிடம் கூட வீரமும், தீரமும், உரமும்,

தரமும் உடைய தமிழ்மொழிப் பற்றோ! நாட்டுப் பற்றோ! இனப் பற்றோ! இருக்கிறதா? என்பது ஆராய்ச்சிக்குரியதாகவே இருக்கிறது. அதாவது, கோழையின் கையில் வாளாக பல அப்பாவித் தமிழர்களின் நெஞ்சத்தில் தமிழ்மொழி உணர்வு, தமிழின உணர்வு, தமிழ்நாட்டு உணர்வு என்ற மூன்றும் அடங்கிக் கிடக்கிறது. இதற்கு என்ன செய்வது?

<u>**குறிப்பு**</u>:- ஐயா! இந்தச் சிந்தனைகளால்தான் தங்களைப் போன்ற அருட்செல்வர்கள் பலர் இருக்கையில் நாங்கள் எங்களுடைய அனைத்துத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் தனித்தே செயல்படுத்துகிறோம். உண்மையான தமிழுணர்வு, நாட்டுணர்வு, இனவுணர்வு பெற்றிருந்த காலஞ்சென்ற தமிழினத் தலைவர், சிறைக்கஞ்சாச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன், சீர்திருத்தப் பாசறை, தன்னலமில்லா பொதுத்தொண்டு ஆற்றிய மாவீரர், வைக்கம் வீரர், சுயமரியாதை இயக்கம் கண்ட தன்மானத் தங்கம் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை எங்களுடைய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கௌரவத் தலைவராக ஏற்றுச் செயல்படுகிறோம். இவற்றை நாங்கள் அனுப்பியிருக்கிற எங்களுடைய மாத ஏடான ‘குருதேவர்’ புத்தகங்கள், அறிக்கைகள், ... முதலிய அனைத்தையும் படித்தும், ஆராய்ந்தும் தெரிந்து கொள்ளுங்கள்.

12) ஐயா, இன்றைய தமிழக மதத்துறையில் அருட்செல்வராக விளங்கும் தங்களுக்கு எங்களுடைய இந்து மறுமலர்ச்சி இயக்கம் நேரடியாக பொள்ளாச்சிக்கும், போயசு தோட்டத்திற்கும், ‘ஓம் சக்தி’ புத்தக அலுவலகத்திற்கும் அனைத்துவகையான அறிக்கைகளையும் தொடர்ந்து அனுப்பி வந்தும் கூட தங்களிடமிருந்து இன்றுவரை அஞ்சலட்டை கூட நன்றி தெரிவித்தோ, பதில் தெரிவித்தோ வரவில்லை! வரவில்லை! வரவில்லை! இது தாங்கள் அரசியல்

தலைவர்களை விட மிகக் கடுமையாகவும், கொடுமையாகவும் இருட்டடிப்பு செய்கிறீர்கள் என்ற பேருண்மையினை விளக்குவதாக எண்ணுகிறோம். எங்களின் இந்த முடிவு தவறாகக் கூட இருக்கலாம். பிழையாகக் கூட இருக்கலாம். ஆனால், அவசரமோ, ஆத்திரப்பட்டதாகவே இருக்காது. விரிவஞ்சி நெடிய விளக்க அஞ்சலை நிறைவு செய்கிறோம். தங்களின் அன்பையும், ஆதரவையும், நட்பையும், தோழமையையும் நாடி எழுதும் இ.ம.இயக்கத்தவர்கள். இது எங்கள் விருப்பம், குருவாணையல்ல.

இத்துடன் வீரமாகாளி சன்னிதானம் பூசை செய்த அருளூறு பிறசாதம் அனுப்பி உள்ளோம். இதைப் பெறுகிற தாங்கள் அருட்துறையில் நிலையான இடத்தைப் பெறுக!

அன்பே சிவம்!

ஓம் திருச்சிற்றம்பலம்.

**//உண்மை நகல்//**

**// இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரா.முத்துராசமூர்த்தி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

[இந்தக் கட்டுரையில் விமரிசிக்கப்படும் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் பதில் அஞ்சலை 1984ஆம் ஆண்டு (2-6-1985இல்) வெளியிடப்பட்ட குருதேவர் அறிக்கையின் ஆண்டுமலரில் 'அருட்செல்வரின் தன்மானமிலா பதிலுரை' என்ற தலைப்பில் காணலாம். இந்த 1984ஆம் ஆண்டுமலர் https://books.gurudevar.org/ என்ற வலைத்தள முகவரியில் குருதேவர் அறிக்கை - 1984ஆம் ஆண்டு வெளியீடுகள் என்ற தொகுப்பில் உள்ளது.]

# கலியுக ஆன்மீக ஆசானுக்கு தரப்படும் அறிவுரை

To
அருள்மிகு சிவராசயோகி, ரெங்கராச தேசிக சாமிகள்,
அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
துறையூர் - 621010,
திருச்சி மாவட்டம்.

அன்புடையீர்!

அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் சார்பாக 3, 4-5-1985 ஆகிய தேதிகளில் மகாநந்திக்குச் சிறப்புப் பூசையும்; அகத்தீசருக்கும், கருவூர் முனிவருக்கும் பத்தாம் ஆண்டு சித்திரா பௌர்ணமி சிறப்புப் பூசையும் நடைபெறும் என்று அச்சடித்து வெளியிட்டுள்ள அறிக்கையைக் கண்டோம்.

அதில் கருவூர் முனிவர் என்று குறிப்பிட்டு இருந்ததைக் கண்டு மனம் வருந்துகிறோம். ஏனென்றால், தஞ்சைப் பெரிய கோயிலின் பின்புறத்திலுள்ள பதினோராம் பதினெண்சித்தர் பீடாதிபதி, தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் படத்தைப் போட்டு அவர்களைக் கருவூர் முனிவர் என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் வேதனையைத் தருகிறது.

அதாவது, 1 ரூபாய், 2 ரூபாய், 5 ரூபாய், 10 ரூபாய் நாணயங்களைப் பற்றி நல்லமுறையில் அறிந்தவர்கள்தான், கணக்குத் தெரிந்தவர்கள்தான் வியாபாரம் செய்ய முடியும். அதைப்போல அருளாளர்களான முனிவர், முனி, முனீசுவரர், யோகி, போகி,

மோகி, பீடாதிபதி, மடாதிபதி, ஆதீனம், சன்னிதானம், இருக்கை, திருவடி, மடம், அமளிகை, மகான், ஞானி, இருடி, அருளாளி, மருளாளி, ஓதுவார், குருக்கள், பண்டாரம், ... என்று 48 வகைப் பிரிவினர் உள்ளவர்களைப் பற்றிய அறிவு, தெளிவு உள்ளவர்களால்தான் அருளுலகில் செயலாற்ற முடியும்.

1 ரூபாய், 2 ரூபாய் நாணயங்களுக்கு இடையில் எப்படி வித்தியாசம் இருக்கிறதோ; அதைப்போல அருளாளர்களின் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவர்களுக்கும் தரத்திலும், திறத்திலும், தகுதியிலும், ஆற்றலிலும், அருள்நிலையிலும், பத்திநிலையிலும், சத்திநிலையிலும், சித்திநிலையிலும், முத்திநிலையிலும், சித்துவிளையாடல்நிலையிலும் நிறைய வேறுபாடு உண்டு. இதைத் தெரியாதவர்கள்தான், உணராதவர்கள்தான், புரியாதவர்கள்தான் தங்கள் மனதுக்குப் பட்டதே வேதவாக்கு, உயர்ந்த உண்மை எனத் தெரிவித்து மகானை - முனி என்றும், யோகியை - சன்னிதானம் என்றும், பீடாதிபதியை - முனிவர் என்றும் கூறி விடுகிறார்கள். இது அவர்களின் அறிவுநிலையைத்தான் குறிக்கிறது.

மாவட்ட ஆட்சியரை (collector), வட்ட ஆட்சியர் (Tahsildar) என்று குறித்தால் எவ்வளவு தவறாகுமோ அதைவிடப் பன்மடங்கு தவறு தாங்கள் **கருவூரார்** அவர்களை கருவூர் முனிவர் என்று குறிப்பிட்டிருப்பது. ஒன்று தனக்கு முழுவதும் தெரிந்து சொல்ல வேண்டும். இல்லையென்றால், தெரிந்தவர்களிடம் கேட்டு விளக்கம் பெற்றுக் கொள்ள வேண்டும். 1 ரூபாயை, 2 ரூபாய் என்று கணக்கிட நேரிட்டால்; 5 ரூபாயை 1 ரூபாய் என்று கணக்கிட நேரிட்டால் என்ன பாதிப்பு ஏற்படுமோ அதைப்போல; அருளுலகத்தார்களின் தகுதி நிலை தெரியாமல், வரலாறு தெரியாமல் இப்படி மாற்றிக் குறிப்பதால், பாதிப்பு ஏற்பட்டே தீரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒருவர் அறியாமையால் சொல்வதாலும், அகம்பாவத்தால் அறிந்தவர் போல் சொல்வதாலும்; நீச்சல் தெரியாத ஒருவன் தனக்கு நீச்சல் தெரியும் என்று கூறி கிணற்றில் குதித்த கதையைப் போல தானும் மூழ்கியும், தன்னைக் காப்பாற்ற வருகிறவர்களையும் மூழ்கடித்தும் அழிவைத் தேடிக் கொள்வதற்குச் சமமாகும்.

ஐயா!

தங்களைத் தாங்கள் கலியுகத்து ஆன்மீக ஆசான் என்றும்; அகத்தியர் சன்மார்க்க சங்கத் தலைவர் என்றும்; சிவராசயோகி என்றும் அறிவித்துள்ளீர்கள். இப்படிப்பட்ட தாங்கள் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறூர் அவர்களை கருவூர் முனிவர் என்று சாதாரணமாகக் குறித்துள்ளீர்கள். அதாவது கருவூர் என்னும் ஊரைச் சார்ந்த முனிவர் என்ற பொருள்படக் குறித்துள்ளீர்கள்.

கி.பி.785 முதல் கி.பி.1040 வரை தாத்தா கருவூறூர் அவர்கள் பதினெண்சித்தர் பீடாதிபதி பொறுப்பில் இருந்து மக்கள் அறிய சுமார் 255 ஆண்டுகள் வாழ்ந்து; பிற்காலச் சோழப் பேரரசை உண்டாக்கியும்; இருபெரும் கோயில்களைக் கட்டுவித்தும்; தமிழினம், தமிழ்நாடு, தமிழ்மொழி தழைக்க உழைத்த உத்தமரைத் தாங்கள் முனிவர் என்று குறிப்பிட்டுள்ளது கண்டு மனம் வருந்துகிறோம். இன்னும், தாங்கள் முனிவருக்கும் பீடாதிபதிக்கும் என்ன வித்தியாசம் என்று அறிய விரும்பினால் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பதில் கூற முடியும்.

தாங்கள் இவ்வாறு குறித்திருப்பதை இக்கால மக்கள் கண்களுக்கு வேண்டுமானால் தவறு இல்லை எனத் தெரியலாம். முனிவர் என்பதை விட வேறு எந்தச் சொல்லாலும் தாங்கள் கருவூறூர் அவர்களைக்

குறித்திருந்திருந்தாலும் இக்கால மக்கள் என்னவென்றே கேட்க மாட்டார்கள். அந்த அளவுக்கு வரலாற்று ஞானம் இல்லை. அப்படிப்பட்ட மக்கள் இருக்கும் வரைதான் தங்களைப் போன்றவர்கள் கூறும் கூற்றுப் பொருந்தும். ஆனால், தாத்தா கருவூரர் அவர்களின் வாரிசில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் தோன்றி இன்றைய நிலையில் இந்துமதத் தந்தையாக, ஞானத் தந்தையாக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, ஞாலகுருவாக, குருமகாசன்னிதானமாக சித்தர் கருவூரர் அவர்கள் தோன்றிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற காலத்தில் தாங்கள் தவறாகச் சொன்னால் எடுபடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள தாத்தா சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் பூர்வீகம் என்ன? தோற்றம் எப்படி? அவர் செய்த அரும்பெரும் அருட்செயல்கள் என்னென்ன? மருத்துவத்திற்கும், கலைக்கும், இலக்கியத்திற்கும், சமுதாயத்திற்கும், அரசியலுக்கும், நாட்டுக்கும், மொழிக்கும், இனத்துக்கும், மனித இன மேம்பாட்டிற்கும் ... ஆற்றிய தொண்டுகள் என்னென்ன? என்பதைப் பற்றியெல்லாம் அறிய எங்களிடம் சரியான விளக்கங்கள் உள்ளன. அத்துடன் அவர் எழுதிய, எழுதித் தொகுத்த இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம், குரு பாரம்பரியம் ... முதலியன பற்றிய அனைத்து நூல்களும்; சித்தர்களின் பாரம்பரியப் பெருமை கூறும் வரலாறான குரு பாரம்பரியத்தில் சித்தர் சாத்திரம் பதினெட்டு, கருப்பு சாத்திறம் பதினெட்டு, சித்தர் படிநிலை ஆறு, சித்தர் கலை அறுபத்துநான்கு, திருமால்நிலை நூற்றியெட்டு, சத்திநிலை இருநூற்று நாற்பத்து மூன்று, சிவநிலை ஆயிரத்தெட்டு, தத்துவ நூல் தொண்ணூற்றாறு, தேவர் சாத்திறம் முப்பத்து மூன்று, இருடி சாத்திறம் நாற்பத்தெட்டு, கன்னியர் சாத்திறம் ஏழு, கோள்நிலை ஒன்பது, இராசிநிலை பன்னிரண்டு, விண்மீன் நிலை இருபத்தேழு,

தவநூல் பதினெட்டு, வேள்விநூல் முப்பத்தாறு, ஞானநூல் ஐம்பத்துநான்கு, சித்தநூல் எழுபத்திரண்டு ... முதலிய நூல்களும் நுண்கலை நூல்கள், கவின்கலை நூல்கள், அறிவியல் நூல்கள், சமய நூல்கள், அரசியல் நூல்கள், மருத்துவ நூல்கள், கட்டிட சாத்திற நூல்கள், ... முதலிய நூல்களும் எங்களிடம் உள்ளன. இருந்தும் உண்மைகளை வெளியிட இன்னும் நற்காலம் உருவாகவில்லை.

தஞ்சைப் பெரியகோயிலில் அவருடைய திருவுருவச் சிலைக்கு மேலே கருவூரார் என்று எழுதிப் போட்டிருக்கிறார்கள். கருவூரார் என்றால் கரூரைச் சேர்ந்தவர்கள் என்று பொருள்; தாத்தா சித்தர் **கருவூறூர்** அவர்களை வணங்கிச் சித்தி பெற்ற அடியான்களை, அடியார்களைக் ‘கருவூ**ரா**ர்’ என்றே அழைப்பது வழக்கம். ஆனால், இந்த வித்தியாசம் கூடத் தெரியாமல் கருவூரார் என்று குறித்திருப்பது கண்டு அதை மாற்ற ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று மனம் வருந்துகிறோம். பற்றுக்குறைக்கு தாங்கள் வேறு கருவூர் முனிவர் என்று தெரிவித்திருக்கிறீர்கள்.

கருவூறூர் = கருவில் ஊறுதவர்கள், அதாவது பிறப்பிறப்பற்ற பெருநிலை படைத்தவர்களை, பீடாதிபதிகளைத்தான் கருவூறூர் என்று குறிப்பிட வேண்டும். அப்படிப்பட்ட பெருமைக்குரியவரே தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளவர். அவரைத்தான் தாங்கள் கருவூர் முனிவர் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

கி.மு.100 முதல் கி.பி.150வரை கரூரில் அமராவதியாற்றங்கரையில் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் கருவூறூர் அவர்கள் வாழ்ந்து அருவுருவசித்தி பெற்று கரூர் பசுபதீச்சுவரர் கோயிலில் நிறைந்துள்ளார். தெரியாதவர்கள் அங்கேயுள்ள கருவூறூர் அவர்களும், தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளவரும் ஒருவரே என்று தவறாகக் குறிப்பிடுகிறார்கள். இந்த வேதனையையும்,

வருத்தத்தையும் யாரிடம் சொல்வது? எங்கே சொல்லித் தீர்ப்பது என்று வருந்துகிறோம்.

ஒன்பதாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக வைகையாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் கி.மு.8956 முதல் கி.மு.8848 வரை மதுரையில் வாழ்ந்தார். எட்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக தாமிரபரணி யாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் கி.மு.10171 முதல் கி.மு.9928 வரை வாழ்ந்தார்.

இவர்களைத் தவிர இன்னும் 1 முதல் 7 வரை உள்ள பீடாதிபதிகளைப் பற்றிய விவரங்களும் உள்ளன. இப்படியிருக்கும் போது ‘கண்டதே காட்சி; கொண்டதே கோலம்’ என்ற முறையில் தாங்கள் கருவூர் முனிவர் என்று சர்வசாதாரணமாகக் கூறிவிட்டீர்கள். இனிமேல், இப்படிப்பட்ட தவறுகளைச் செய்ய வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இம்மண்ணுலகில் உள்ள பயிரினங்களையும், உயிரினங்களையும் ஆட்சி செய்யக்கூடியது ஒன்பது கோள்களும், பன்னிரண்டு இராசிகளும், இருபத்தேழு விண்மீன்களும் என்று பதினெண்சித்தர்கள் தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளார்கள். வான சாத்திறம், பிறப்பியல் சாத்திறம், அங்கவியல் சாத்திறம், வரியியல் சாத்திறம், ... என்று எண்ணற்ற சாத்திறங்களை வகுத்த பதினெண்சித்தர்களை தாங்கள் அதிகம் தெரிந்து கொண்டீர்களா? ஏனென்றால், தாங்கள் “நமக்கு வரும் துன்ப துயரங்களுக்கு எல்லாம் நவக்கிரகங்கள் காரணம் அல்ல” என்று தெரிவித்திருக்கிறீர்கள். இந்துமதத்தின் பெருமையை இவ்வாறு சிறுமைப் படுத்துவதற்காக நாங்கள் வருந்துகிறோம்.

உயிர்ப்பலி கொடுக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்யக்கூடாது என்று கூறும் தாங்கள் ஒரு உயிருள்ள, அழகான மானைக் கொன்று அதன் தோலை உரித்து அந்தத் தோலின் மீது

அமர்ந்து கலியுகத்து ஆன்மீக ஆசான் என்று கூறிக் கொள்ளலாமா? தாங்கள் அந்த மானைக் கொல்லவில்லை என்று கூறினாலும் இக் கொள்கையுடைய தாங்கள் மான் தோல் மீது அமரலாமா? என்று எண்ணி வருந்துகிறோம். அறியாமைகளை ஏன் வளர்க்க வேண்டும் என்று வேதனைப்படுகிறோம்.

இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம். இவற்றிற்கான விடையை, பதிலை அன்பு கூர்ந்து அனுப்புங்கள்.

அன்பே சிவம்

ஓம் திருச்சிற்றம்பலம்.

அன்பு

சித்தரடியான் வீரமாகாளி சன்னிதானம்,

பரமாச்சாரியார் நெ.சேவுகன்.

10.5.1985.

**//உண்மை நகல்//**

**// இதன் மூலநகல்: சித்தரடியான் திரு நெ.சேவுகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

# அருளுலகச் சர்வாதிகாரம் அமைத்தே தீருவோம்!

சென்னை-11,
13-6-85.

பேரன்புமிக்க P.சீனிவாசன் (Railway Retired 'A' grade Guard, 112B/4, க.ச. வேல்முருகன் ஆசிரமம், முத்துராச வீதி, முதலியார் சத்திரம், திருச்சி - 620001) அவர்களுக்கு;

இ.ம.இ., அ.வி.தி., இவை சார்ந்த அனைத்து அமைப்புக்களுக்கும் தலைமைப் பொறுப்பாளராக இருக்கும் பிறமாச்சாரியார், அங்காளப் பரமேசுவரி சன்னிதானம் சி.கவிக்குமார் (56, N.G.O.காலனி, பொன்னேரி-601204) வரையும் பதில் மடல்.

1) அனைத்தும் தாத்தாக்கள், ஆத்தாக்கள் செயலே! இலைமறை காயாக இருநூறு (200) ஆண்டுகளுக்கு மேல் இருந்து வரும் **<u>அருளாட்சி அமைப்பு முயற்சி இயக்கங்கள்</u>** அண்மையில் எங்களைப் போன்ற இளைஞர்களின் முயற்சியால் அரசுப் பதிவு பெற்றும், மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றியும், குருதேவர் மாத இதழ் வெளியிட்டும், பல நூறுயிரக்கணக்கான அறிக்கைகளும் அறிவிக்கைகளும் வழங்கியும், வசதிவாய்ப்புகளுக்கு ஏற்பச் சில புத்தகங்கள் பதிப்பித்தும், தமிழ்நாடெங்கும் அருளை அநுபவப் பொருளாக வழங்கும் அருட்பணி விரிவாக்கத் திட்ட (அ.வி.தி.) நிலையங்கள் நாற்பதுக்கும் (40) மேல் தோற்றுவித்தும், இந்து மறுமலர்ச்சி இயக்கப் (இ.ம.இ.) பணிகளுக்காக வந்தவர்களை எல்லாம் அவர்களின் தரம் பற்றி ஆராயாமல் அடியான்களாகவும், அடியாள்களாகவும், அடியார்களாகவும் உருவாக்கி; நாட்டு நடப்பில் அனைத்துத் துறைகளிலும் உள்ள அவலக் கேவலங்களை,

கடுமையான, கொடுமையான எதிர்ப்புக்களுக்கு இடையில் விளக்கி விமர்சிக்கும் கொள்கை விளக்க முழக்கக் கூட்டங்கள் நாடெங்கும் நிகழ்த்தியும் செயல்படும் நிலையே எங்களின் நிலை.

2) இந்த நாட்டின் சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய நிறுவனங்களும், நிர்வாகங்களும் பெரும்பாலும் தன்னலவாதிகளிடமும், எதேச்சதிகாரச் சர்வாதிகாரிகளிடமும், தமிழின நலம் பேண நாட்டமில்லாதவர்களிடமும், தமிழரல்லாத அன்னியரிடமுமே வசமாக மாட்டிக் கொண்டிருக்கின்றது. எனவேதான் நாங்கள் துடிப்புமிக்க, துணிவுமிக்க, ஆற்றல்மிக்க, ஆர்வமிக்க இளைஞர்களின் கூட்டமாக இருந்தும் கூட; பொறுப்போடும், பொறுமையோடும், அடக்கத்தோடும், அமைதியோடும் எள்முனையளவு கூட போராட்டங்கள் வந்திடாமல் மிகுந்த முன்னெச்சரிக்கைகளுடன், உலகியல் போக்குகளிலிருந்து விலகியும், ஒதுங்கியும், தனித்துச் செயல்பட்டு வருகின்றோம். எங்களால் முடிந்தவரை உண்மையைச் சொல்கின்றோம்; நன்மையைச் செய்கின்றோம்.

உண்மையான இந்துமதம் 43,73,085 ஆண்டுகளுக்கு முன்னால் ‘இளமுறியா’ (லெமூரியா) கண்டத்தில் பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்ற வரலாற்றையும்; அவர்கள் உருவாக்கிய வழிபடுநிலையங்கள், வழிபடுநிலையினர்கள், அருளுலக இலக்கியங்கள், கலைகள், அறிவியல்கள், ... முதலிய அனைத்தையும் தமிழ்மொழி வாயிலாக ஆர்வமுள்ளோர் அனைவருக்கும் வழங்கி; அவற்றால் அவரவர் அருளுலக அநுபவங்களைப் பெற்ற பிறகே எங்களோடு இணைந்து செயல்படுமாறு செய்து வருகின்றோம்.

3) இன்றைக்கு உலக அளவில் பல்வேறு அருளாளர்களும், திருச்சபைகளும், ... இயங்கி வருகின்றனர். நாங்கள் இவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்கள். எங்களுக்கு சாதி, மத, மொழி, இன வேறுபாடுகள் கிடையாது! கிடையாது! கிடையாது! யாரும் யாரையும் அடிமைப்படுத்தக் கூடாது! எதுவும் எதையும் அடக்கியாளக் கூடாது!

சுரண்டலோ, சூழ்ச்சியோ, ஏமாற்றலோ இல்லாத உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்க முயலுகின்றோம்.

சித்தர்நெறி என்னும் உண்மையான இந்துமதப்படி; மனிதர்கள்தான் கடவுளாகின்றனர் (வழிபடுநிலையினர்) என்பதால்; எல்லா மொழியினரும் அவரவர் தாய்மொழியில் தங்களின் முன்னோர்களையும், மூத்தோர்களையும் (Ancestors and Elders) வழிபட்டு அருளைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்குத் தேவையான வழிபாட்டு நிலைய அமைப்புக்கள், வழிபாட்டு முறைகள் ... முதலியனவற்றை தமிழ்மொழியின் மூலம் ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகக் கலைகளால் உருவாக்கித் தரவும்; தேவையான சாத்திற, தோத்திற முறைகளைப் பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியில் அனாதிக் காலத்திலேயே உருவாக்கிய சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சைகள், ... மூலமும்; நேம, நியம, நிடத, நிட்டைகள் மூலமும்; ஓம, ஓக, யாக, யக்ஞ, வேள்விகள் மூலமும் வகுத்துத் தருவதே எங்களின் குருதேவரின் செயல்திட்டம்.

4) அன்பு கூர்ந்து தாங்கள் எங்கே எங்களது மெய்ஞ்ஞானக் கொடியைப் பார்த்தீர்கள்? யார் மூலம் எனது முகவரியைப் பெற்றீர்கள்? எங்களைப் பற்றி என்னென்ன செய்திகளை அறிந்தீர்கள்? எங்களுடைய வெளியீட்டில் எவையெவற்றைப் பார்த்தீர்கள்? ... என்ற விவரங்களைக் குறித்து அஞ்சல் அனுப்பினால் தங்களது அறிமுகத்தை புரிமுகமாக்கும். இதுவரை நாங்கள் வெளியிட்டுள்ள வெளியீடுகளுக்கும்; இவ்வருட குருதேவர் சந்தாவுக்கும் ஆக ரூ.60/- அனுப்பினால் எங்களது வெளியீடுகளைத் தங்களுக்கு அஞ்சலில் அனுப்புகின்றோம். அதாவது, தங்களுக்கு எங்களின் கொள்கைகள், குறிக்கோள்கள் பிடித்திருக்குமேயானால்தான் தொடர்ந்து தொடர்பு வைத்திருக்கலாம். இல்லையென்றால் தொடர்பு தேவையற்றதாகும்.

5) தாங்கள் எங்களுடைய தலைமைச் செயலகமான மேலூர் கொட்டாம்பட்டிக்கு உடனே செல்வது நல்லது. அங்கே பேருந்து

நிலையத்தருகில் காதி வசுத்திராலயம் உள்ளது. அங்கு விசாரித்துக் கொண்டோ அல்லது நத்தம் போகும் நகரப் பேருந்திலோ ‘காரியேந்தல்பட்டி வீரமாகாளி சன்னிதானம், குருகுலம்’ என்று சொன்னால் உரிய இடத்தில் இறங்கிக் கொள்ளலாம். அங்கு ஞாயிற்றுக்கிழமை, அமாவாசை, முழுநிலவுப் பருவப்பூசை நாட்கள், சந்திர சூரிய கிரகண நாட்கள், ... முதலிய நாட்களில் உண்மையான இந்துமதப்படி யாகங்கள் செய்து அருளை அநுபவப் பொருளாக வழங்கி நலம் விளைவிக்கின்றார்கள். திருச்சியிலிருந்து மூன்று மணி நேரத்தில் கொட்டாம்பட்டிக்குச் சென்று விடலாம். மதியத்திற்கு மேல் புறப்பட்டீர்கள் என்றால், மாலையில் தங்கி ஓய்வாக இருந்து அனைத்தையும் அறிந்து வருவீர்கள். உங்கள் வருகையை முன்கூட்டி அஞ்சல் மூலமோ, தந்தி மூலமோ, அ.வி.தி. தலைமைச் செயலாளர் பரமாச்சாரியார் நெ.சேவுகன் [C/O காதி வசுத்திராலயம், கொட்டாம்பட்டி Post, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்-625103] முகவரிக்குத் தெரிவித்துவிட்டுச் செல்லுங்கள்.

6) தாங்கள் தங்களை உலகம் நம்பவில்லை என்று வருந்தத் தேவையில்லை. நாங்கள் உங்களை நம்புகின்றோம். ஏனென்றால், வைர வியாபாரிகளுக்குத்தான் எண்ணற்ற வெள்ளைக் கற்களுக்கு இடையில் வைரக்கல்லைத் தேர்ந்தெடுக்கத் தெரியும். உங்களுடைய சாதனைப் பட்டியல் தேவையில்லை. எங்களுடன் சேர்ந்து புதிய சாதனைப் பட்டியல் உருவாக்க முயலுங்கள். அதுவே நீடித்த பயனை நல்கும். எங்களுடைய தலைமைப் பணியாளர் சோ.இரவீந்திரன் அவர்கள் தற்போது தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர்கள் தங்களைச் சந்திக்க வருகின்றார். சந்தித்து உரையாடி எம்மைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளுங்கள். வீரமாகாளி சன்னிதானத்திலேயே சோ.இரவீந்திரனைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

திருச்சியில் சித்தரடியான் பொ.சங்கிலியா பிள்ளை அவர்கள் (7B, பாபு ரோடு, திருச்சி-2) இருக்கிறார்கள். திருச்சி காட்டூரில் இராமனுதபுரம் பகுதியில் திரு. பிச்சை மற்றும் மாரிமுத்து என்ற சித்தரடியான்கள் யாகசாலை வைத்து நடத்தி வருகின்றார்கள். திருச்சி முசிறியில் (அண்மையில்) டெலிபோன் எக்சேஞ்சில் பணியாற்றும் க.பன்னீர்செல்வம் (கலிங்கன் லேன், காந்தி நகர், முசிறி Post, திருச்சி - 621211) உள்ளார். அவரைச் சென்று நாடி அறிந்து கொள்ளுங்கள். முசிறி குலக்குடியில் கு.ம.கணேசன் என்பவர் நெடுங்காலமாக அ.வி.தி. பணியாற்றி வருகின்றார். திருச்சி கண்டோன்மென்ட் காவல் நிலையத்தில் குருதேவருடைய நண்பர் S.பன்னீர்செல்வம் SI ஆக உள்ளார். தஞ்சையில் அருள்மிகு புன்னைநல்லூர் மாரியம்மன் சன்னிதானம் A.இராமர் (92/4296, ஒட்டக்காரத் தெரு, கீழவாசல், தஞ்சை-613001) உள்ளார். இவர்களையும் சந்தித்து எங்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

7) தாங்கள் நேரில் வந்து குருதேவரை சந்திக்க வேண்டும் என்று விரும்பி கடிதம் எழுதியிருந்தீர்கள். உங்களுடைய வேண்டுகோளை ஏற்கின்றோம். போற்றுகின்றோம். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் முன் அனுமதி பெற்று உங்களுடைய வருகையைத் திட்டமிட்டுத் தெளிவாக எழுதிவிட்டு; அதற்கு முன்னதாக எங்களுடைய வெளியீடுகள் சிலவற்றைப் படித்துவிட்டு, எங்களுடைய இயக்க அடியான்களையும் பார்த்து விட்டு வருவது நலம்.

8) “இறைவனின் அருளைப் பற்றி ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர் M.G.R., மற்றும் எல்லா மந்திரிகளுக்கும் எழுதினேன். எல்லாம் **செவிடன் காதில் ஊதிய சங்காக**ப் போய்விட்டது. இதுதான் நம்நாட்டின் பண்பாடு” எனக் கவலையுடன் எழுதியிருந்தீர்கள். கவலை வேண்டாம். நாம் அருளாட்சி அமைக்கும் போது இந்த அரசியல்வாதிகள் எல்லாம் இருக்குமிடம் இல்லாமல் சென்று விடுவார்கள். இது போன்ற புலம்பல்கள் இனியும் தேவையில்லை.

நாங்கள் மிகத் தெளிவாக இந்த நாட்டின் ஆட்சி அதிகாரங்கள் அனைத்தையும் அருளாளர்களே எடுத்துக் கொள்ள வேண்டும். அதன்மூலம் **அருளுலகச் சர்வாதிகாரம்** (The Dictatorship of Divinators) அமைத்தே தீருவோம். அப்போது அருளுலக இருள்கள், சுரண்டல்கள், ஏமாற்றுக்கள், சர்வாதிகாரங்கள், மடமைகள் ... அனைத்தும் அழிக்கப்படும். அதன்பிறகே உலக சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமை நிலைநிறுத்தப்படும். இதற்கு தாங்களும் உறுதுணையாக நின்று நிலைநிறுத்த வாருங்கள்! உங்களையும் பயிற்சிகள் பெற்று அருளாளராக மாற்றிச் செயல்படுங்கள்.

அடிக்கடி குருதேவரின் முகவரிக்கு கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள். குருதேவர் தங்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புகின்றார். ஆர்வத்தை வீணாக்கிட வேண்டாம். குருதேவரின் முகவரி:

சித்தர் கருவூறார், ESI மருத்துவக் குடியிருப்பு, செம்பியம், சென்னை-600011.

- நகலெடுத்தவர்: அருள்மிகு கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டை காளியம்மன் பீடாதிபதி, சுடலைக்காரி ஆதீனம், வேம்படிதாளம் சித்தரடியான் ம.செ.விசயராகவன், 17/06/1985. [2/80, சுப்பிரமணிய சுவாமி கோவில் அருகில், வேம்படிதாளம், சேலம் மாவட்டம்-637504.]

**//உண்மை நகல்//**

**// இதன் மூல நகல்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

# அருளாட்சிப் பணி இருளகற்றும் கண்டிப்புக் குருவாணைத் திருவோலை

(1) தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்;

அருளாட்சி பணி அடியான், அடியாள், அடியார்களுக்கு விடுக்கும் அ.ப.இ.க.கு.திருவோலை. புரிந்தும் புரியவைத்தும் விரைந்தேற்றுச் செயல்படுக. குருவாணை.

(2)

(அ) "எந்த ஒரு தனி மனிதனும் [தனியாகவே] அருளுலகத் தலைவனாக, அருளாளனாக, தொண்டனாக ... இருந்துதான் அருட்பணி செய்து சிறந்த பயன்களை உருவாக்க முடியும் என்று நினைப்பது மடமை, அறியாமை, பயித்தியக்காரத் தனம், முதலாளித்துவம், அடிமைப் புத்தி, ... என்பதை விளக்கவே பதினெண்சித்தர்கள் 48 வகையான சித்தர்கள், அருளாளர்கள், வழிபடு நிலையக் கருவறை மூலவர்கள் ... என்று பலரை உருவாக்கிக் காட்டியுள்ளார்கள்."

(ஆ) "மரம், செடி, கொடி, புல், பூண்டு முதல் ஈ, எறும்பு, யானை, மனிதர் ஈறாக யாரும் கடவுளாகலாம் என்ற தத்துவமே தனி மனித ஆதிக்கத்தைத் தடுக்கத்தான்."

(இ) "வாழையடி வாழையென அருளாளர் என்றென்றும் தோன்றும் வண்ணம் படைக்கப்பட்ட இந்து மதத்தில் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையோடு குருவழி நின்று பூசைகளைச் செய்தால் அருளாட்சிப்

பணி நாயகங்கள் ஆகிடலாம். எனவே, அடுத்தவரை நம்பி அருளாட்சிப் பணி நிகழ்த்த முற்படாமல் ஒவ்வொருவரும் தங்களை நம்பியே அருளாட்சிப் பணியில் ஈடுபட வேண்டும்.”

- கருவாசகம், தருவாசகம், திருவாசகம்.

இவற்றைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக!

(3) ............ ............ ............

(4) ............ ............ ............ நமது இயக்கம் அருளுலக விடுதலை இயக்கம் என்பதால் கடுமையான கட்டுப்பாடும், ஒற்றுமையும், பற்றும், பாசமும், இணைப்பும், பிணைப்பும் இருக்க வேண்டும். அரசியல்வாதிகள் போல் போட்டி, பொறுமை, வீம்பு, ஆணவம், பதவி வெறி, புகழ் மோகம், ... கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

(5) ............ ............ ............

(6) அனைவரும் பொறுப்போடும், பொறுமையோடும் செயல்படுமாறு குருவாணை வழங்கப்படுகிறது. இதில் அனைவர் கையொப்பமும் பெறப்பட்டு நேரடியாக எமக்கு அனுப்பப்படட்டும்.

(ஒப்பம்)

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்.**

12-2-85.

**[உண்மை நகல்]**

**//மூலம்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல். இதில் உள்ள 3, 4, 5ஆம் பத்திகளில் தனிப்பட்ட அடியான்களுக்கு எழுதப்பட்ட கண்டிப்புகள் இதில் வழங்கப்படவில்லை.//**

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

தோற்றம்: கி.பி.1772

# அருளாட்சி அமைப்பு

# அழைப்பு அறிவிப்பு

தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு முதலியவற்றில் அருள் மழையால் பசுமை செழித்தோங்க பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு, ஞானகுரு, அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, சித்தர் கருவூரூர் தமது அருட்பயணத்தை தமிழ் நாடெங்கும் நிகழ்த்தி வருகிறார்.

உலகின் முதல் இனமும், விண்ணக மொழி இனமுமாகிய தமிழினத்தின் மூலம் 43,73,086 ஆண்டுகளுக்கு முன் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், உடன் வந்த பிறரும் வழங்கிய உண்மையான **இந்துமத**த்தின் (சித்தர் நெறி) அடிப்படையில் விருப்பமுள்ள தனிமனிதர்களை அருளாளர்களாக்கி அருட்பணியாற்றும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

மெய்யான இந்துமதத்தின் மூலமே அருளுலக பொருளுலக கேடுகளை அகற்ற முடியும்! சித்தர் நெறி எனும் இந்துமதத்தை உணர்ந்து செயல்பட

வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

**//1986இல் அச்சிடுவதற்காக எழுதப்பட்ட அறிவிக்கையின் நகல்.//**

**"கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**



"... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் வடஆரியர்களின் வேதமத மாயையிலிருந்தும், சமசுக்கிருத மொழியின் பிடியிலிருந்தும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் விடுவித்தால்தான் அருளாட்சி அமைக்க முடியும் என்று கண்டறிந்தார். இப் பேருண்மையினை விண்டுரைத்திட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களை உருவாக்கி காவல் தெய்வங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணியைச் செய்திட்டார் ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com

www.books.gurudevar.org